சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 05.01.2022

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12194/B/2021**

திருமதி. ரூபகலா — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
காடையாம்பட்டி வட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (05.01.2022) தொலைபேசியின் வாயிலாக நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திருமதி. ரூபகலா அவர்கள் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, திருமதி கிரிஜா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், காடையாம்பட்டி வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 23.06.2021 தேதியிட்ட மனுவில், சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், மரக்கோட்டை கிராமம், கிராம எண் 013, புல எண் 375/2Aக்கு FMB நகல் மற்றும் அ பதிவேடு, சிட்டா, அடங்கல் நகல்களின் விவரங்கள் தொடர்பாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, மனுதாரர் 02.08.2021 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத்தருமாறு தெரிவித்து, மனுதாரர் 20.09.2021 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது இன்று (05.01.2022) இவ்வாணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்கள் அவருக்கு வழங்கப்பட்டது என்று தெரிவித்தார். இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான மனுதாரர் அவர்கள், தன்னால் கோரப்பட்ட தகவல்கள் எனக்கு கிடைக்கப்பெற்றது என்று தெரிவித்து, அவரது நன்றியையும் ஆணையத்திற்கு தெரிவித்ததை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஓம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**பிரிவு அலுவலர் / பிரிவு பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12194/B/2021</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
காடையாம்பட்டி வட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

திருமதி. ரூபகலா,
க/பெ கே. முத்துசாமி,
எண் 13, 13-1, ரங்கி தெரு,
குகை சேலம் 636 006.

Copy to: File
SCPA - 07-01-22